# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி: 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 56/2022 நாள் : 22.02.2022

**நகர்ப்புற உள்ளாட்சி சாதாரணத் தேர்தல் - கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி வார்டு எண். 4, வாக்குச்சாவடி எண். 4 AV மறு வாக்குப்பதிவு 24.02.2022 வியாழக்கிழமை அன்று நடைபெற உள்ளது.**

**மறுவாக்குப்பதிவு நடைபெறும் இடம்**

**கடலூர் மாவட்டம் - புவனகிரி பேரூராட்சி**
**வார்டு எண் 4, வாக்குச்சாவடி எண். 4 AV**

கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சியில் வார்டு எண். 4, வாக்குச்சாவடி எண். 4 AV 22.02.2022 அன்று மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிந்துள்ள வாக்குகளை எண்ணும்போது, இயந்திரத்தின் திரையிடும் பகுதி (Display section) பழுதின் காரணமாகவும், மேற்படி கட்டுப்பாட்டுக் கருவியினை பெல் நிறுவனத்தைச் சார்ந்த பொறியாளர்கள் பழுது பார்த்தும் குறைவினை நிவர்த்தி செய்ய இயலவில்லை.

எனவே, கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி, திருவள்ளுவர் தெரு, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் 24.02.2022 வியாழக்கிழமை அன்று மறு வாக்குப்பதிவு காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும். கடைசி ஒரு மணி நேரம், அதாவது, மாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரை கோவிட்-19 அறிகுறி உள்ளவர்கள் மற்றும் பாதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

மறு வாக்குப்பதிவு நடைபெறும் புவனகிரி பேரூராட்சி வார்டு எண். 4, வாக்குச்சாவடி எண். 4 AV, வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு இடது கை நடுவிரலில் அழியா மை பதிவு செய்யப்படும். அன்று மாலை 6.00 மணிக்கு வாக்குப்பதிவுகள் முடிந்தவுடன், மேற்குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில், வாக்கு எண்ணிக்கை தொடங்கி தேர்தல் முடிவு அறிவிக்கப்படும்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

22/2/2022
மக்கள் தொடர்பு அலுவலர்